**செய்தி வெளியீடு எண் : 443** **நாள்: 20.03.2022**

## செய்தி வெளியீடு

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மூலம் இன்று (20.03.2022) செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் வேலைவாய்ப்பினை பெற்ற இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். இம்முகாமில் 507 தனியார்துறை வேலையளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டன. இவ்வேலைவாய்ப்பு முகாமில் 72460 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். இம்முகாம் மூலம் 8752 வேலைநாடுநர்கள் பணிநியமனம் பெற்றனர். மேலும் இம்முகாமில் முதல்கட்ட நேர்முகத்தேர்வில் 2983 நபர்கள் தேர்ச்சிபெற்று இரண்டாம் கட்ட நேர்முகத்தேர்வுக்கு தங்களை தகுதிப்படுத்திக் கொண்டனர். இம்முகாமில் கலந்துகொண்ட 81 மாற்றுத்திறனாளிகளில் 31 மாற்றுத்திறனாளிகள் பணிநியமனம் பெற்றுள்ளனர். மேலும் 15 திறன் பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொண்டனர். இதில் திறன் பயிற்சிக்கு பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1368 ஆகும். அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்கு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 1576 ஆகும்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மற்றும் பிற மாவட்ட இளைஞர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையின் ஒருங்கிணைப்புடன் உணவு, குடிநீர், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. மகளிர் திட்டத்தின் கீழ் சுயஉதவி குழு அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. மேலும், திறன் பயிற்சி மேற்கொள்வதற்கான பதிவுகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாகவும், அயல்நாட்டு வேலைக்கான பதிவுகள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் வாயிலாகவும், தொழிற் பழகுநர் பயிற்சிக்காக பதிவு செய்வதற்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சி பிரிவின் வாயிலாகவும் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. மேலும், தொழில் நெறி வழிகாட்டல் வழங்குவதற்கென

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தினால் அரங்கு அமைக்கப்பட்டிருந்தது.

மே 2021 முதல் இதுவரை 37 பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும் 297 சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதனில் 6,215 வேலையளிப்போரும், 3,22,976 வேலைநாடுநர்களும் பங்கேற்றதில் 49,965 வேலைநாடுநர்கள் பல்வேறு துறைகளில் பணிநியமனம் பெற்றுள்ளனர். இதனில் 548 மாற்றுத்திறனாளிகளும் அடங்குவர்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இவ்விழாவில் அரசுப் பணிகளுக்காக பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்களுக்கு கட்டணமில்லா பயிற்சியினை வழங்கும் வகையில் கல்வித் தொலைக்காட்சியில் ஒளிபரப்பினை தொடங்கி வைத்தார். இப்பயிற்சி வகுப்பு அன்றாடம் முற்பகல் 7 மணியிலிருந்து 9 மணி வரை ஒளிபரப்பப்படும். இதன் மறு ஒளிபரப்பு மாலை 7 மணியிலிருந்து 9 மணி வரை செய்யப்படும்.

இவ்விழாவில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்களும் கலந்து கொண்டார்கள். மேலும், இவ்விழாவில் பல்வேறு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இவர்களுடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் செயலர் திரு. ஆர். கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., அவர்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் இயக்குநர் திரு. கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர. ராகுல் நாத், இ.ஆ.ப., மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**